**Chenkaantal**
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

**Volume - 1, Special Issue - 1, January 2022** **E-ISSN: 2583-0481**

# Men in Abdul Rahman *Neyar Viruppam*

**Dr. L. Felinda**, Assistant Professor of Tamil, Perumalpuram, Tirunelveli, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0003-1953-5764**
**DOI: 10.5281/zenodo.6622308**

## Abstract

*It is essential for both men and women to live together in a society. But men are highly valued in society. Women are seen fragile and of no importance. Masculinity is praised for energy, valor and brutal strength. In every family in Tamil Society there will be a head. He is the head of the family. Abdul Rahman has shown men in his novel* 'Neyar Viruppam' *in a keen manner. The ups and downs of the family depend on him. The article focuses on the delination of men in the chosen novel.*

**Keywords:** Abdul Rahman, *Neyar Viruppam*, Men.

## References

[1] Abdul Rahman. *Neyar Viruppam*. National Publications, Chennai, 1978.
[2] Raman M.K. *Ullakathin Parvai Indiavai Nokuthal Kalai*. Illakia Perumantram, Pondicherry, 2009.
[3] Rama Ilangovan. *Ithaya Verkal.* Mookani pathipagam, Bangalore – 560047, 2001.
[4] Ampal Raja. *Agni Kunjukal*. Annai Pathipagam, Pudukottai, 2002.
[5] Kavirajan. *Thee Pilampukal*. Saratha Pathipagam, Kanchipuram, 2001.
[6] Shanmugam Pillai. M. *Kurunthogai*, Tamil University, Tanjur, 1985.
[7] Sivasubramanian. *Thirukurral*. Kamarcial Offset Printers, Sivakasi – 626130, 2014.
[8] Durgadevi. *MImmai Mudi ooru Nodi P*. Digest Publication, Nagercoil, 2013.
[9] Thennarasan. *Suthanthiram Virpanaikku.* Chennai – 600 014, 2013.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

செங்காந்தள்

*அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்*



மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# அப்துல் ரகுமானின் நேயர் விருப்பத்தில் ஆடவர்

**முனைவர் லீ.பெலிண்டா,** தமிழ் ஆர்வலர், பெருமாள்புரம், திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0003-1953-5764
**DOI: 10.5281/zenodo.6622308**

**ஆய்வுச்சுருக்கம்**

சமுதாயம் என்ற அமைப்பில் ஆண், பெண் இருவரும் சேர்ந்து வாழ்வது இன்றியமையாத ஒன்றாகும். இருவருள் சமூகத்தில் உயர்ந்த மதிப்புடையவராக ஆண்கள் விளங்குகின்றனர். ஆண்மை என்பதற்கு ஆற்றல், வீரம், கோபம் என்றெல்லாம் பொருள் கொள்ள இயலும். ஒவ்வொரு குடும்பத்திற்கும் அடிப்படையாய் விளங்குபவர் குடும்பத் தலைவர் ஆவார். குடும்பத்தின் உயர்வும், தாழ்வும் இவரைச் சார்ந்தே அமைகின்றன.

**திறவுச்சொற்கள்:** அப்துல் ரகுமான், நேயர் விருப்பம், ஆடவர்.

**முன்னுரை**

பண்டைக்காலச் சமூகத்தில் ஆண்கள் மிகுதியாக உழைப்பவர்களாகக் கருதப்பட்டனர். ஆகையினால் அவர்களே முதன்மையானவர்களாக விளங்குகின்றனர். இவ் ஆடவர்கள் உழைக்கும் வர்க்கத்தைச் சார்ந்தவர்களாக இருக்கின்றனர். அன்று முதல் இன்று வரை இலக்கியங்களும், ஆண்களுக்குரிய செயல்களையும், இலக்கணங்களையும் உயர்ந்தனவாகவே மதிப்பிடுகின்றன. அப்துல் ரகுமானின் நேயர் விருப்பத்தில் இடம் பெறும், ஆடவர் குறித்த செய்திகளை ஆராய்வதாக இவ்வியல் அமைகின்றது.

**ஆடவரின் பண்புகள்**

சமுதாயத்தில் ஆடவர்கள் உழைக்கும் வர்க்கத்தைச் சார்ந்தவர்களாகக் கருதப்படுகின்றனர். இவர்கள் குடும்பத்தை நிர்வகிக்கும் தலைமைப் பொறுப்பில் இருக்கின்றனர். ஆகையினால் அக்குடும்பத்தைப் பாதுகாத்துச் செல்லும் பொறுப்பு ஆடவர்களுக்கு உரியதாகி விடுகின்றது. சங்க காலங்களில் பல குறுநில மன்னர்கள் போரிட்டுக் கொண்டே இருந்தனர். அப்போரில் ஈடுபட்ட ஆண்களே நாட்டின் அரசாட்சி நிர்வாகத்தைத் தீர்மானிப்பவர்களாக விளங்கினர். இதனால், ‘ஆணின் வழிப்பட்டதே உலகம்’ என்ற கருத்துத் தோன்றியது. எனவே நாட்டினையும், குடும்பத்தையும் நிர்வகிக்கும் பொறுப்பு ஆண்களுக்கு உரியதாகவே கருதப்படுகின்றது.

**வினையே ஆடவர்க்கு உயிரே வாள்நுதல்**

**மனை உறை மகளிர்க்கு ஆடவர் உயிர் (சண்முகம்பிள்ளை (உ.ஆ.) குறுந்தொகை, பா.எ. 135)**

என்று தொழில் செய்வது ஆடவர்க்கு உரிய கடமை ஆகும் என்பதை குறுந்தொகை வலியுறுத்துகின்றது. ஆடவர்க்குரிய பண்புகளாக ‘வானமே எல்லை’ என்ற கவிதை நூலில் சு.வேதா இராமன் பின்வருமாறு கூறுகின்றார்.

**அறிவை அறிந்திடும்**

**அன்பு செய்து வாழ்ந்திடும்**

**இல்லத்தில் இனிமை தரும்**

**கற்பு நெறி போற்றிடும்**
**பெண்மை மதித்திடும்**
**உழைப்பை உயர்த்திடும்**
**உண்மை ஒளிவிடும்**
**வீரம் விளைந்திடும்**
**விவேகம் வழி நடந்திடும்**
**தியானம் பழகிடும் ஆண்மை (சு.வேதா இராமன், வானமே எல்லை ப.9)**

இக்கவிதை, ஆடவர்க்குரிய குணங்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. இப்பண்புகளை பெற்றிருப்பது மட்டுமின்றி பெண்களைப் பாதுகாப்பதும் ஆண்களுக்குரிய கடமையாகும் என்று 'கவிக்கோ அப்துல் ரகுமான்' சுட்டுகின்றார்.

**திரவப் பெண்மைக்குத்**
**திடப்பொருள் கிண்ணமாய்**
**ஆண்மை இருக்குமங்கே (நே.வி.ப. 64)**

என்கிறார். பூசலார் நாயனார், சிவபெருமான் மீது அன்பு கொண்டு, தனது மனதுள் அவருக்கு ஒரு கோவிலைக் கட்டியதால், 'கற்பனை' என்ற தலைப்பிலே, "பூசலார் நாயனார்" (நே.வி.ப. 93) என்ற பெயரை மட்டும் எழுதி கவிதையாக்கி விடுகிறார் அப்துல் ரகுமான். ஆடவர் பண்பினைச் சிறப்பிக்கும் முகமாக 'வடலூரும் வார்தாவும்' என்ற தலைப்பிலே, கருத்தாழமிக்க ஒரு கவிதையைப் புனைந்திருக்கிறார் கவிஞர் அப்துல் ரகுமான்.

**"அரசியல் இருட்டை**
**அகற்ற ஓர் 'காந்தி'**
**சமுதாய இருட்டைச்**
**சாய்க்க ஓர் 'சோதி'**
**...மூவாசை வெற்றிலையை**
**எப்போதும் மெல்லுவதால்**
**காவிக் கறைப்பட்ட**
**பல்லல்ல எனக் காட்டக்**
**காவி கட்டிக் கொள்ளாமல்**
**களவெற்றிச் சின்னமாய்த்**
**தூயவெள;ளை அணிந்து வந்த**
**துறவியார்" (நே.வி. பக். 44, 45)**

இக்கவிதையிலே, வடலூர் வள்ளலார் மற்றும் தேசப்பிதா காந்தியடிகளின் பண்புநலன்களையே பட்டியலிடுகின்றார் ஆசிரியர். ஒரு ஆடவனுக்குரிய பண்புகளாக உழைப்பு, வீரம், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, அன்பு என்று பலவற்றைக் கூறலாம். சிறந்த ஆடவர்கள் இப்பண்புகளைக் கொண்டு திகழ வேண்டும்.

**வீரம்**

ஆடவரின் பண்புகளில் வீரமும் ஒன்று. ஆண்கள் வீரத்தின் அடையாளமாகக் கருதப்பட்டனர். முற்காலங்களில் ஆண்கள் தங்களது வீரத்தினை காண்பிப்பதற்காகவே போருக்குச் செல்வார்கள்.

வாளினை உறையில் பாதுகாப்பாக வைத்திருந்தாலும் அவை துருப்பிடிக்கவில்லை என்பதை, போர்க்களங்களே நிரூபிக்கும். அதுபோலவே, ஆண்களும் தங்களது வீரத்தினைப் போர்க்களங்களில் நிரூபிப்பார்கள் என்பதனை,

**உறையில் கிடந்தாலும்**
**துருப்பிடிக்காத வாட்கள் நாம்**
**என்பதைப்**
**போர்க்களங்கள் நிரூபித்தன (நே.வி.ப. 50)**

என்கிறார் அப்துல் ரகுமான். போர்க்களங்களில் ஆயுதம் ஏந்திப் போர் செய்யும் ஆடவர்களிடையே, ஆயுதத்தை நிராகரித்து, தன்னுடைய அன்பான சொல்லினால் அல்லது இசையினால் கூட, பகைவர்களைப் பணிய வைத்து விடலாம். போர் என்றால் ஆயுதம் ஏந்தி, போர் புரிய வேண்டும் என்பதில்லை. அகிம்சை வழியில் கூட, போர்களை முற்றிலுமாக நீக்கி எதிரிகளைப் பணிய வைக்க முடியும் என்று கவி பாடி, மகாபாரத குருச்சேத்திரப் போரினை, நம் நாட்டு சுதந்திரப் போரோடு ஒப்பிடுகின்றார். ஆயுதம் ஏந்தத் துடித்த அர்ச்சுனர்கள் என்ற கருத்தினால் தீவிரவாதத்தையும், ஆயுதங்களை நிராகரித்தவன் கண்ணன் என்ற கருத்தினால் மிதவாதத்தையும் குறிப்பிடுகின்றார்.

**அது ஒரு**
**முரண்பட்ட குருஷேத்திரம**
**அங்கே -**
**அர்ச்சுனர்கள்**
**ஆயுதம் ஏந்தத் துடித்தார்கள்**
**ஆனால் கண்ணனோ**
**ஆயுதங்களை நிராகரித்தான்**
**அவன் புல்லாங்குழலே**
**எதிரிகளைப் பணிய வைத்து விட்டது (நே.வி. ப.51)**

வாளெடுத்துப் போர் செய்யும் ஆடவர்கள், உண்மையான கரங்களில் வாளினை எடுக்காமல் மலர்களைக் கொண்டு சமாதானம் பேசி, வன்முறையினை அழிக்கின்ற அத்தன்மை கூட வீரத்தையே குறிக்கும். அவ்வீரத் தன்மையானது, தன் வாழ்க்கை நிலையை உயர்த்தும் தன்மையுடையது ஆகும் என்பதை,

**வாளெடுக்கும் வன்கரத்தில் வண்ணமலர்ப் பூவளித்து**
**வன்முறையை கொன்றழிக்கும் வீரத்தன்மை நம்**
**வாழ்நிலையை வானுயர்த்தும் வைரத்தன்மை (ஆரூர் புதியவன், சிறகு முளைத்த விரல்கள் ப.44)**

என்று ‘ஆரூர் புதியவன்’, தனது கவிதை நூலான சிறகு முளைத்த விரல்கள் என்பதில் கூறுகின்றனர். வீரம் என்பது எதிரிகளுடன் போர் புரிந்து, அவர்களை வெல்வது மட்டும் இல்லை. அவர்களுடன் சமாதாமாகப் பேசி வன்முறைகளை முற்றிலுமாக நீக்குவதையும் வீரம் என்று கூறலாம். பகைவரை அழிப்பது மட்டுமே குறிக்கோளாகக் கொள்ளாமல் அன்பு வழியில் மக்களைக் காப்பதையும் வீரமாகக் கருதலாம்.

**தொழிலாளர்களின் நிலை**

உழைத்து வாழும் மனித வர்க்கத்தைத் தொழிலாளர்கள் என்று கூறலாம். ஒவ்வொரு தொழிலாளனும் தன்னை ஒரு பகுத்தறிவாளனாக மாற்றிக் கொள்ள வேண்டும். தொழிலாளர்கள் தன்

நிலையினை உணர்ந்து விழிப்புணர்வுடன் செயல்பட்டு, தங்களது போராட்டப் பாதையில் வெற்றி கண்ட நாளே, 'மே முதல் நாள்' ஆகும். இந்த நாளே, உலகில் இன்று தொழிலாளர் வர்க்கத்தால் தொழிலாளர் தினமாகப் பெரிதும் போற்றி மகிழப்படும் திருநாளாக விளங்குகின்றது. மாலைப் பொழுதினை முதலாளியாகவும், நிலத்தின் மேல் காணப்படுகின்ற பனித்துளிகளைத் தொழிலாளிகளின் வியர்வை நீராகவும் சுட்டுகின்றார் ஆசிரியர்.

**சோலையிலே பாளையிலே**
**துளிர்களிலே தளிர்களிலே**
**கோலமலர் இதழ்களிலே**
**குலவும் பனித்துளிகளெல்லாம்**
**மாலையெனும் தொழிலாளி**
**வடித்துவிட்ட வியர்வை நீர்**
**காலையெனும் முதலாளி**
**கணக்கெடுக்கும் முத்துக்கள் (நே.வி.ப.34)**

சோலை, பாளை, துளிர்கள், தளிர்கள், மலர் இதழ்களில் காணப்படும் பனித்துளிகளை, தொழிலாளர்களின் வியர்வை நீராகவும், அவர்கள் உழைப்பை உறிஞ்சி, ஒய்யாரமாக வாழும் முதலாளிகளின் முத்தாகவும் காட்டுகின்றார் கவிஞர் அப்துல் ரகுமான். உழைக்கும்போது வருகின்ற வியர்வை நீரானது, கங்கை நீரைவிட புனிதமானது, கண்ணீரை விட வலிமையானது. அவ்வியர்வை நீரினைச் சிந்தி உழைத்தால் மட்டுமே, நாம் வேண்டுகின்ற வரம் கிடைக்கும் என்றும், அவ்வாறு உழைப்பவர்களுக்கு மட்டுமே இவ்வுலகை ஆள்கின்ற உரிமை உண்டு என்பதையும் உலக மக்கள் அனைவரும் உணர வேண்டும் என்பதற்காக,

**வெறும் பூவை அர்ச்சித்து**
**வீணாகும் பக்தனே!**
**வியர்வைப் பூஅர்ச்சிப்பாய்**
**வேண்டுகின்ற வரம் கிடைக்கும்**
**உழைப்பவர்க்கே ஆள்கின்ற**
**உரிமையுண்டு என்பதொரு**
**உண்மையை உலகமெல்லாம்**
**உணரட்டும் (நே.வி.ப. 40)**

என்றும் விளக்கிக் கூறுகின்றார்.

**உழவுத் தொழிலும் உழவர்களின் சிறப்பும்**

உழைப்பின் காரணமாக உலக மக்களைப் பட்டினியிலிருந்து விடுதலை பெறச் செய்வோர் உழவர்கள். உழவனின் உழைப்பில் உள்ள கடுமையை உலகோர் புரிந்து கொள்ளாதவர்களாக இருக்கின்றனர். பணம் கொடுத்தால் விரும்புகின்ற அரிசி கிடைக்கும் என்று எளிதாகவே எண்ணுகின்றனர். ஆனால் அவ்வுழவர்கள் நெல்லை உற்பத்தி செய்வதற்கு வடிக்கின்ற வியர்வை நீரோ விலை மதிப்பற்றது.

உழவர்களை, கையில் ஏரினை ஏந்தியிருக்கும் இக்கால பலராமர் என்றும், போராயுதமேந்தும் கண்ணனுக்கு அண்ணன்மார் என்றும் கூறி அவர்களை உயர்வுபடுத்துகின்றார் ‘கவிக்கோ அப்துல் ரகுமான்’

**இவரோ**

**எராயுதமேந்தும்**

**இக்காலப் பலராமர்;**

**போராயுதமேந்தும்**

**கண்ணனுக்கு அண்ணன்மார் (நே.வி.ப.26)**

ஏரினைக் கொண்டு, உழவுத் தொழில் செய்து, கிடைக்கின்ற விளைச்சல்களின் சுகப்பயனை தான் அனுபவித்தது மட்டுமின்றி, மற்றவர்களுக்கும் பகிர்;ந்து கொடுக்கும் ‘நிலமகளின் மணவாளர்’ என்று கூறி உழவர்களைப் பெருமைப்படுத்துகிறார்.

**பொன்னேர்ப் புணர்ச்சி செய்து**

**போகத்தின் சுகப்பயனை**

**மற்றவர்க்கும் பகிர;ந்து தரும்**

**மணமகளின் மணவாளர் (நே.வி.ப. 27)**

அனைவருக்கும் உணவினைக் கொடுக்கின்ற உழவர்கள் உழவுத் தொழில் செய்யவில்லையென்றால், ஒவ்வொரு வீட்டிலும் உலை என்பது கிடையாது. இவ்வாறு உயிர்களைக் காக்கின்ற உழவுத் தொழில் அழிந்தால், உலக இனமே அழிய நேரிடும் என்பதனை,

**உழவன் இல்லையெனில்**

**அடுப்பில்**

**உலையில்லை!**

**உழவு அழிந்தால்**

**உலக இனம் அழியும் (க.கி.முருகானந்தம், சிகரத்தைத் தொட சிறகை விரி - பக்.15-16)**

என்று க.கி. முருகானந்தம் உலகத்தவர்க்கு உணர்த்துகின்றார். இவ்வுலக மக்கள் உயிர் வாழ்வதற்கு உழவர்கள் தங்கள் உயிரையும் பொருட்படுத்தாது, உழைப்பையும் அதிகமாகவே கொடுத்து உழைக்கின்றனர். இதனை,

**உலகமே உயிர் வாழ**

**தன்னுயிர்**

**உறக்கத்தையும் சுகத்தையும்**

**நாடு கடத்துகிறான்**

**உழவன் (தென்னரசன், சுதந்திரம் விற்பனைக்கு - ப.25)**

என்று கவிஞர் ‘தென்னரசன்’ கூறுகின்றார். உழவர்களைப் போற்றிப் பாடவேண்டும். ஏன் எனில், அவ்உழவர்களே உலகத்தின் ‘சுவாசப் பைகள்’ அவர்களே இவ்வுலகின் கௌரவமான ‘காவியநாயகர்கள்’ என்கிறார் கவிக்கோ அப்துல் ரகுமான். இதனை

**உலகத்தின் சுவாசப்**

**பைகளாய் உழைக்கும்**

**உழவர்களைப் பாடுவோம்” (நே.வி.ப.26)**

 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

**"உழவர்களைப் பாடுவோம்**
**ஏனென்றால் இவர்களே**
**கௌரவமான**
**காவியத்;தின் நாயகர்கள் (நே.வி.ப. 28)**

என்ற கவிதை வரிகள் உறுதிப்படுத்துகின்றன. உழவுத் தொழில் செய்கின்ற உழவர்களுக்கு, ஒரு வேளை கஞ்சிக்குக் கூட வழியில்லை என்றாலும் எவர் மீதும் கோபம் கொள்ளாது, எவரையும் வெறுக்காது, நேர்மையான உள்ளங்களைக் கொண்டவர்களாக இருக்கின்றனர் என்பதனை,

**ஒரு வேளை**
**கஞ்சிக்கு வழியில்லை**
**என்றாலும் யாரையும்**
**வஞ்சிக்கும் குணமில்லை (கவிராஜன், தீ பிழம்புகள் - ப.52)**

என்று 'கவிராஜன்' குறிப்பிட்டு உழவர்களின் வெள;ளை உள்ளத்தினை வெளிச்சப்படுத்துகிறார்.

**முடிவுரை**

ஆடவரின் பண்புகளான உழைப்பு, வீரம், அன்பு, தியாகம் குறித்துப் பாடிய கவிஞர், உழைப்பின் உயர்வையும், உழைப்போர் வறுமையினையும், உழைப்பினைப் பெறுபவர் செல்வச் செழிப்பினையும் சிறந்த முறையில் எடுத்து மொழிகின்றார். சமூகத்தில் புரையோடிக் கிடக்கின்ற வரதட்சணைப் பிரச்சினையையும், நாட்டுப்பற்று என்ற பெயரிலே, பதவி வகிக்கும் பணப்பற்றாளர்களாகிய அரசியல்வாதிகளையும் சாடுகின்றார்.

**துணைநூற்பட்டியல்**

[1] அப்துல் ரகுமான். *நேயர் விருப்பம்*, நேஷனல் பப்ளிகேஷன்ஸ், சென்னை – 600017, 1978.
[2] இராமன் மு.கு. *உலகத்தின் பார்வை இந்தியாவை நோக்குதல்.* கலை இலக்கிய பெருமன்றம், புதுச்சேரி, 2009.
[3] இராம இளங்கோவன். *இதய வேர்கள்.* முக்கனி பதிப்பகம், பெங்களூர் – 560 047, 2001.
[4] ஏம்பல் ராஜா. *அக்னிக் குஞ்சுகள்.* அன்னை பதிப்பகம், புதுக்கோட்டை, 2002.
[5] கவிராஜன். *தீ பிழம்புகள்*, சாரதா பதிப்பகம், காஞ்சி மாவட்டம் - 603 209, 2001.
[6] சண்முகம் பிள்ளை. மு. *குறுந்தொகை*, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1985.
[7] சிவசுப்பிரமணியன், *திருக்குறள்*, கமர்சியல் ஆப்செட் பிரிணடர்ஸ், சிவகாசி – 626130, 2014.
[8] துர்காதேவி. மு. *இமை மூடி ஒரு நொடிபி* – டைஜஸ்ட் பப்ளிகேஷன்ஸ், நாகர்கோவில், 2013.
[9] தென்னசரன். *சுதந்திரம் விற்பனைக்கு.* சென்னை – 600 014, 2013.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.
**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.